செய்தி இதழாகப் பதிவு பெற்றது


University of Jaffna Sri Lanka
Periodical Division
Library

# தந்தி

இல: 1048 | 1970 ஜூன் 6 சனிக்கிழமை | விலை சதம் 5

## லட்சக்கணக்கான ரூபா பொருள் நஷ்டம்

# கொழும்பில் ஏற்பட்ட பயங்கரத் தீ விபத்து



சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவரும், நியமன உறுப்பினருமான திரு. எம். சி. சுப்பிரமணியத்துக்கு யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் அன்பர்களும், ஆதரவாளர்களும் மாலைபோட்டு மரியாதை செய்தபோது எடுத்த படம். (ய)

**கொழும்பு கிருண்பாஸில் நேற்று ஏற்பட்ட பிரம்மாண்டமான தீ விபத்தினல் குறைந்தது 10 லட்சம் ரூபா பெறுமதியுள்ள ஏற்றுமதிப் பொருட்கள் நாசமாகியுள்ளதாக மதிப்பிடப் படுகிறது.**

ஏற்றுமதி செய்யப்படும் இலங்கையின் உற்பத்திப் பொருட்களில் 90 சதவீதம் கிருண்பாஸில் உள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

இந்த விபத்தின் காரணமாக இலங்கையின் மிகப் பெரிய ஏற்றுமதி வர்த்தக ஸ்தாபனம் தீக்கு உள்ளாகியது.

நீண்ட நேரமாக தீயை அணைக்கும் முயற்சியில் தீயணைப்புப் படையினர் முயற்சி மேற்கொண்டும் பலன் கிடைக்காததால், கொழும்பு மாநகர சபை நீர்ப்பகுதி ஊழியர் உதவிக்கு அழைக்கப்பட்டனர்.

ஏற்றுமதிப் பொருட்களின் இதர சேமிப்பு நிலையங்களுக்கும் தீ பரவாமல் தடுப்பதற்கு தியணைப்புப் படையினர் பெரு முயற்சி செய்தனர்.

நிலைமையைப் பயன்படுத்தி கொள்ளை அடிப்பவர்களைத் தடுக்கவும், மக்களின் அச்சத்தைப் போக்கவும் பொலீசாருக்கு உதவியளிக்கவும் ராணுவமும் சேவைக்கு அழைக்கப் பட்டது.

முதலில் கொப்பரு சேமிப்பு நிலையத்தில் பற்றிய தீ, பின்பு இதர தும்பு, தேயிலை, ரப்பர் சேமிப்பு நிலையங்களுக்கு பரவியது.

தீவிபத்துக்கான காரணம் தெரியவில்லை. பொலீசார் இது பற்றி விசாரித்து வருகிறார்கள். (ய)

## ஜனதிபதி கிரி

ஜெனிவா, ஜூன் 5

இந்திய ஜனதிபதி திரு. வி. வி. கிரி 43 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் வருகிற புதன்கிழமை 121 நாடுகள் அடங்கிய சர்வதேச தொழிலாளர் ஸ்தாபன ஆண்டு மகாநாட்டில் உரையாற்றுவார்.

1927-ம் ஆண்டு இந்திய தொழிலாளர் பிரதிநிதியாக திரு. கிரி கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினர். (ய)

### பிரதமருக்கு டட்லி கடிதம்

## 'அமைதியை நிலை நாட்டுதல் ஆட்சியாளரின் பொறுப்பு'

"எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் குற்றம் புரிந்தாலும் நாட்டில் அமைதியையும் சட்டத்தையும் நிலைநாட்டுவது ஆட்சியில் உள்ளோரின் கடமையாகும்" என முன்னுள் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா பிரதமர் திருமதி ஸ்ரீமாவோவுக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமரின் கடிதத்துக்கே திரு. சேனநாயக்கா இவ்வாறு பதில் கூறியுள்ளார். அவர் அப்பதிலில் மேலும் கூறுவதாவது:-

"எனது முன்னைய கடிதத்துக்கு நீங்கள் கடந்த 4-ந் திகதி அனுப்பிய கடிதத்துக்கு இங்கே பதில் எழுத முற்படுகின்றேன். நான் பலாத்காரத்தைத் தூண்டுவதாகக் குற்றம் சுமத்தி எழுதப்பட்ட தங்கள் பதில் கடிதத்தில், 1965-ம் ஆண்டு தேர்தலுக்குப் பின்னர் நிகழ்ந்த சில உதாரணங்களைக் காட்டியுள்ளது, எனக்கு அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் அளிக்கின்றது.

"நீங்கள் குறிப்பிட்டுள்ள சம்பவங்கள் சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விவரங்களை அமைச்சில் உள்ள "பைலிலும்" பொலீஸ் திணைக்களத்திலும் இருந்து அறிந்து கொள்ளலாம். அந்த பைல்களை ஆராய்ந்தால், நான் என்றுமே வன்முறைகளுக்கு ஆதரவளிக்கவில்லை என்பது தெளிவாகும்.

"நாட்டிலே அமைதி, சட்டம் ஆகியவை கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன என்ற தங்களின் கடிதக் கருத்துக்கு எனது கருத்து முரண்பாடாக உள்ளது. எனக்குக் கிடைத்து வரும் தகவல்கள் தங்கள் கூற்றுக்கு முற்றிலும் புறம்பானதாகவே உள்ளன.

"உங்கள் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வண. தேவமொட்டாவ அமரவன்ச தேரோ பற்றியும் பலாங்கொடைச் சம்பவம் பற்றியும் கருத்துத் தெரிவிக்க விரும்பவில்லை. இவை நீதிமன்றத்தால் தீர்மானிக்கப் படும் என்று நம்புகிறேன்.

"நாட்டில் அமைதியையும் சட்டத்தையும் நிலைநிறுத்துமாறு தேச மக்களுக்கு விடுத்த வேண்டுகோளில் நீங்கள் குறிப்பிட்டதை நான் அறிவேன். ஆனல் எனது முறைப்பாட்டில் நான் குறிப்பிட்ட நிலைமைகள் தொடர்ந்து நிகழ்ந்த வண்ணமே உள்ளன.

(4-ம் பக்கம் பார்க்க)

## குறைந்த விலைக்கு அரிசி பெற அரசு பகீரதப் பிரயத்தனம்

உலக மார்க்கெட்டில் குறைந்த விலைக்கு உணவு வாங்க முடிந்த வழிவகைகளை ஆராயும்படி உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன உத்தர விட்டுள்ளார்.

வாழ்க்கைச் செலவைக் குறைக்கும் நோக்கத்துடனேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

இறக்குமதி உணவுப் பொருட்களின் அதிக விலையே வாழ்க்கைச் செலவு உயர்வுக்கு முக்கிய காரணம் எனக் கருதப்படுவதால குறைந்த விலை உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதன் மூலம் வாழ்க்கைச் செலவைப் பெருமளவு குறைக்க முடியும் என அமைச்சர் நம்புகிறார்.

உப உணவுப் பொருட்களின் விலையையும் சீனி, மா முதலியவற்றின் விலையையும் குறைக்க வேண்டுமென்பது அரசாங்கத்தின் கொள்கையாகும்.

மா இறக்குமதியைக் குறைத்து அதற்குப் பதில் அரிசி இறக்குமதி செய்வதால் இரண்டு கொத்து கூப்பன் அரிசி வழங்க முடியும் என அமைச்சு வட்டாரங்கள் கருதுகின்றன.

குறைந்த விலைக்கு அரிசி, மா பெற வழியுண்டா என ஆராயும்படி வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் பணிக்கப்பட்டுள்ளன. (ல)

## உளவுக் கப்பல் பிடிபட்டது

ஹாங்காங், ஜூன் 5

20 பேர்களைக் கொண்ட அமெரிக்க உளவுக் கப்பல் ஒன்றை வட கொரியா கைப்பற்றி இருப்பதாய் பியாங் யாங் வானெலி அறிவித்தது. (ய)

### மீனுட்சி



என்னுங்க, மாணவர்களின் தலைமயிரைச் சட்டவிதி வைத்து வெட்டும் உரிமை பள்ளிக்கூடத்துக்கு உண்டா?

அப்படியென்றால் அது சிகை அலங்காரப் பள்ளிக்கூடமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீலவதி—ராசையா சீவனும்ச வழக்கு

# கொழுத்த குமரிகளை விரும்புகிறார் கணவன்!

### மீண்டும் ஒற்றுமையாக வாழ மனைவி மறுப்புக் கூறினாள்

“பிரதிவாதிக்கு கொழுத்த பெண்கள் மீது அலாதிப் பிரியம். தனது மனைவி மெலிந்த பெண் என்றபடியால் அவர் அவளை விரும்பவில்லை. “உன்னைப் போன்ற எலும்புக் கூடுகளுக்குப் பதில் எத்தனையோ கொழுத்த அழகிய பெண்களை நான் வைத்திருக்க முடியும்” என கணவன் தன் மனைவியிடம் கூறி இருக்கிறார்.”

சீலவதி — ராசையா சீவனும்ச வழக்கில் மனைவியின் வழக்கறிஞர் கொழும்பு பிரதம நீதிபதி திரு. ஈ. எப். டி- சில்வா முன் மேற்கண்டவாறு கூறினார்.

மீண்டும் தன்னுடன் வந்து வாழும்படி பிரதிவாதி ராசையா மனுதாரரை அழைத்தார். ஆனால் மனுதாரர் அதற்கு சம்மதிக்கவில்லை.

அவர் வேறு பெண்களை வைத்திருப்பதாலும் மனைவியை ஒழுங்காகக் கவனிக்க மாட்டார் என்றபடியாலுமே மனைவி அவருடன் மீண்டும் ஒற்றுமையாக விரும்பவில்லை என நீதிபதியிடம் கூறப்பட்டது.

தமிழர் ஒருவரை கணவனாக வைத்திருப்பதை அவளுடைய பெற்றோர் விரும்பாததாலேயே அவள் செல்ல மறுப்பதாக கணவனின் வழக்கறிஞர் சொன்னார்.

இவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் காதலித்து கள்ளத்தனமாக திருமணம் செய்தவர்கள் என மனுதாரப் பெண்ணின் வழக்கறிஞர் சொன்னார்.

திருமணம் செய்து சிறிது நாட்களுக்கு இருவரும் சந்தோஷமாக வாழ்ந்தனர் என்றும், ஆனால் புருஷன் குடிகாரன் என்றபடியால் அவர் வீட்டுச் செலவுக்குப் பணம் கொடுக்கவில்லை என்றும் இதையடுத்தே குடும்பத்தில் சச்சரவு ஏற்பட்டதென்றும் மனுதாரரின் வழக்கறிஞர் மேலும் சொன்னார்.

நீதிபதி: “பிரதிவாதியின் தொழில் என்ன?”

வழக்கறிஞர்: “சாதாரணத் தொழிலாளி.”

நீதிபதி: “இருவரும் இளம் வயதினர். அவர்கள் மீண்டும் ஒற்றுமையாக வாழ்ந்தால் என்ன? சொந்த விருப்பத்தில்தானே மணம் செய்தனர்?”

மனுதாரரின் வழக்கறிஞர்: “சார், இப்போது அவர் வேறு பெண் ஒருத்தியை வைத்திருக்கிறார். அவள் கொழுத்த பெண். கொழுத்த பெண்கள் மீதுதான் அவருக்கு அதிக விருப்பம்.”

மேல் விசாரணை ஜூன் 20-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ல)

### துறைமுகத்தில் 8 கப்பல்களில் உணவுப்பொருள்

அரிசி, சீனி, மா, உரம் முதலியன ஏற்றிக் கொண்டு எட்டுக் கப்பல்கள் துறைமுகத்தை வந்தடைந்துள்ளன.

இக் கப்பல்களில் 21,2000 தொன் அரிசி, 30,000 தொன் மா, 10,500 தொன் சீனி, 8,000 தொன் உரம் இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

முன்னைய அரசினால் உணவு உற்பத்தித் திட்டத்துக்கென இறக்குமதி செய்யப்பட்ட பெருந்தொகையான புதிய வாகனங்களும் இன்னும் இரண்டொரு நாளில் கொழும்புத் துறைமுகத்துக்கு வந்து சேருமாம். (ல)

### மரத்தில் ஏறிய 70 வயது நபர் பலாக் காயுடன் கீழே விழுந்து மரணம்

“அன்றைய தினம் காலை 4 மணி போல் இரவுச் சாப்பாட்டுக்குப் பலாக்காய் ஒன்று பறிப்பதற்காக எனது தந்தை வீட்டின் முன் இருந்த மரத்தில் ஏறினார். பலாக்காயைப் பறித்த மறுகணம் அவரும் பலாக்காயுடன் கீழே விழுந்து பேச்சு மூச்சின்றி நிலத்தில் கிடந்தார்.”

பூஜாப்பிட்டியைச் சேர்ந்த டி. எம். களுபண்டா என்ற 70 வயது நபர் ஒருவரின் ஒரே மகளான டி. எம். யசோமெனிக்கா கண்டி ஆஸ்பத்திரியில் நடைபெற்ற மரண விசாரணை ஒன்றில் மேற்கண்டவாறு சொன்னாள்.

பலாக்காய் ஒன்று பறிக்கும் போது மரத்திலிருந்து கீழே விழுந்ததால் களுபண்டா மாண்டார்.

தனது தந்தை கீழே விழுந்தவுடன் தான் கூச்சல் போட்டதாகவும், அக்கம்பக்கத்தோர் ஓடி வந்து அவரை கண்டி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றதாகவும் அவர் மயக்கம் தெளியாது மாண்டதாகவும் இறந்தவரின் மகள் யசோமெனிக்கா மேலும் கூறினார்.

இறந்தவரின் சகோதரர் ஒருவர் சாட்சியமளித்த பின் விபத்து மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (ல)

### ‘கருச்சிதைவு முயற்சி பற்றி பொலீஸுக்கு அறிவித்தேன்’

“என் மூலமாகத்தான் அவள் கருத்தரித்தாள் எனக் கூறுவதில் உண்மையில்லை. நான் அவளுடன் கணவனைப் போல் வாழ ஆரம்பிப்பதற்கு முன்பே அவள் கருத்தரித்திருந்தாள். அவள் கருச்சிதைவு செய்ய முயற்சிப்பதாக நான் அறிந்து இவ்விஷயத்தை பெற்றிசன் ஒன்றின் மூலமாகப் பொலீஸாருக்குத் தெரியப்படுத்தினேன். இதைத் தெரிந்து கொண்ட அவள் பழி வாங்குவதற்காக நான்தான் குழந்தையின் தந்தை எனக் கூறி இப்போது என்னிடமே சீவனும்சமும் கேட்கிறாள்.”

மத்துகமை நீதிபதி திரு. நிஸ்ஸங்க வீரரத்ன முன் விசாரிக்கப்பட்ட சீவனும்ச வழக்கொன்றில் என். ஜீ. தோமஸ் பெரேரா என்பவர் மேற்கண்டவாறு சொன்னார்.

அகலவத்தை ஓமத்தா கொலனியைச் சேர்ந்த ஜீ. சுமனாவதி என்ற பெண் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தாள்.

தோமஸ் பெரேரா தன் சாட்சியத்தில் மேலும் கூறியதாவது:—

“எனது முதல் மனைவி இறந்த பின் நான் எனது இரண்டாவது மனைவியின் உதவியுடன் கடை ஒன்று நடத்தி வருகிறேன். மனுதாரப் பெண்ணின் தந்தையும் என் கடையில் கடனுக்குப் பொருட்கள் வாங்கினார். 1964-ம் வருடம் தொடர்ந்து இரண்டு மாதப் பாக்கியை அவர் செலுத்தாததால் நான் அவரிடம் பணம் கேட்டேன். அப்போது தன்னிடம் பணம் இருக்கும் போது கட்டுவதாக அவர் சொன்னார்.

“அதே வருடம் அக்டோபர் மாதம் மனுதாரரின் தந்தை என் கடைக்கு வந்து என் மனைவியை ஏசி விட்டு, அவளைக் கத்தியால் குத்துவதாகப் பயமுறுத்தி விட்டுச் சென்றார். இச்சந்தர்ப்பத்தில் சுமனாவதி கருச்சிதைவு செய்ய முயல்வதாகக் கேள்விப்பட்டு நான் பொலீஸுக்கு விஷயத்தைத் தெரியப்படுத்தினேன்.

“அதன் பின் நான் பொலீஸுக்குப் பலவந்தமாக அழைத்துச் செல்லப்பட்டு, மனுதாரப் பெண்ணை பொறுப்பேற்க நான் இஷ்டமாக இருப்பதாக எழுதப்பட்ட கடிதம் ஒன்றில் கையொப்பமிட நிர்ப்பந்திக்கப்பட்டேன்.”

மேல் விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. (ல)

### கொலை வழக்கில் சாட்சி சொன்னார்

### ‘கப்பம் கேட்ட ஐ.ஆர்.சி.யை கடை முதலாளி கொன்றார்’

இரத்தினபுரி, ஜூன் 5

“தியோனிஸ், கடையிலிருந்து வாசலுக்குப் பாய்ந்து முதலாளியைத் தாக்கப் பார்த்தார். முதலாளி வெட்டுக் கத்தி ஒன்றினால் தியோனிஸைத் தாக்கவே, தியோனிஸ் இரத்த வெள்ளத்தில் கீழே விழுந்தார்.”

இரத்தினபுரி நீதிபதி திரு. ஸ்ரீலால் பெரேரா முன் விசாரிக்கப்பட்ட வழக்கொன்றில் பீ. சந்திரபால என்பவர் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கில், எம்பிலிப்பிட்டிய ஹல்மில்லா என்ற இடத்தில் வைத்து என். தியோனிஸ் என்பவரை வெட்டுக் கத்தி ஒன்றினால் தாக்கிக் கொன்றதாக எச். எம். மார்ட்டின் என்பவர் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார்.

சாட்சி மேலும் கூறியதாவது:—

“அன்று மாலை 4-30 மணி போல் காலஞ்சென்ற தியோனிஸ் கடைக்குவந்து முதலாளியின் ஆசனத்தில் அமர்ந்தார். பின்பு சாராயப் போத்தல் ஒன்று வாங்குவதற்காக பன்னிரண்டு ரூபா கேட்டார். தன்னிடம் பணம் இல்லை என முதலாளி சொன்னார். தியோனிஸ் கடையில் இருந்த போத்தல் ஒன்றினுள் கையைப் போட்டு கஜூக் கொட்டை எடுத்துச் சாப்பிடத் தொடங்கினார். இதைத் தொடர்ந்து கடையை விட்டு வெளியேறும்படி முதலாளி கோரியும் தியோனிஸ் வெளியேறவில்லை.

“சிறிது நேரம் கழித்து தியோனிஸ் முதலாளியை உதைத்தார். முதலாளி விழுந்து எழும்பியதும் தியோனிஸ் அவரை அறைந்தார். தன்னை அடிக்க வேண்டாம் என முதலாளி கும்பிட்டார். தப்பிக்க முடியாததால் முதலாளி வெளியே வாசலுக்குப் பாய்ந்து ஓடினார். தியோனிஸ் பொல் ஒன்றை எடுத்துக் கொண்டு முதலாளியை விரட்டினார். இச்சமயம் முதலாளியின் கையில் வெட்டுக் கத்தி ஒன்று கிடைக்கவே, அவர் அக்கத்தியால் தன்னை விரட்டி வந்த தியோனிஸைத் தாக்கினார். தியோனிஸ் இரத்த வெள்ளத்தில் கீழே விழுந்தார்.”

என். டொமானிஸ் என்பவர் சாட்சியமளிக்கையில் காலஞ்சென்ற தியோனிஸ் ஒரு “ஐ. ஆர். சி.” என்றும் கப்பம் கேட்டு வாழ்க்கை நடத்துபவர் என்றும் சொன்னார்.

மேல் விசாரணை ஜூன் 6-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ல)

### விசித்திர உலகம்

அமெரிக்காவிலுள்ளது விஸ்கொன்ஸின் நகர். அங்கு உயர்தரக் கலாசாலை ஒன்றின் விதிக்கு விரோதமாக இரு மாணவர்கள் நீண்ட தலைமயிரை வளர்த்தார்கள். அதன் பெறுபேறாக இருவரும் கலாசாலையிலிருந்து நீக்கப்பட்டார்கள். எனவே அவர்கள் அடிப்படை உரிமை கோரி நீதிமன்றம் சென்றார்கள். வாஷிங்டன் சுப்ரீம் கோட், அவர்கள் இருவரையும் கலாசாலையால் விலக்கியது நியாயமே என்று தீர்த்துள்ளது. இது தலைமயிரை வளர்ப்பதற்காக அமெரிக்காவில் அண்மையில் நடத்தப்பட்ட போராகும். ஆனால் இலங்கை வாலிபர்களோ நீண்ட தலைமயிர் வளர்ப்பதை அத்துணை விரும்புவதாகத் தெரியவில்லை. ஏனெனில் கடந்த தேர்தலில் தலை முடியையும் தாடியையும் மீசையையும் பணயம் வைத்துப் பந்தயம் பிடித்த பல வாலிபச் சிங்கங்கள் இரவோடு இரவாகத் தாடி, மீசை, தலைமுடியை அப்படியே அகற்றி விட்டு வழுக்கையோடு ஹாயாகத் திரிகின்றார்கள். என்ன விசித்திர உலகம்!

தந்தி

ராஜா

6 - 6 - 70 இதழில்

★ மறு பிறப்புண்டா? முற்பிறப்பில் எங்கே பிறந்தீர்கள்? இதோ ஒரு உண்மைச் சம்பவம்.

★ நடிகை லட்சுமியின் திருமணத்தில் குழப்பம்.

★ கேக் செய்வது எப்படி?

★ லாட்டரியினால் லாட்டரி அடிக்கும் சினிமா.

★ யேசுநாதர் வேடத்தில் எம். ஜீ. ஆர். நடிக்கலாமா?

தந்தி
சிறு விளம்பரங்கள்

வசியம்

காதலில் வெற்றியை எதிர்பார்ப்பவர்களுக்கு தவறாத மலையாளி வசிய பரிகாரம். மூன்று நாட்களில் பலன் கிடைக்கும். இருவரின் பெயர்களுடன் இலவச விபரங்களுக்கு எழுதுங்கள்: சிவபாலன், குப்த வித்தியாதனய, ஊருப்பொல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டிய புருஷன் திடீரென வீடு திரும்பினார்

# கள்ளப்புருஷன் ஜன்னல் வழியே பாய்ந்து ஓடினார்

## விவாகரத்துக்கு அனுமதி வழங்கி நீதிபதி தீர்ப்பு

கண்டி, ஜூன் 5

"எனது மனைவிக்கு வேறொரு ஆடவனுடன் தொடர்பு இருக்கிறதென சந்தேகித்த நான், அன்றைய தினம் இரவு வீடு திரும்பமாட்டேன் எனச் சொல்லி விட்டு வெளியேறினேன். ஆனால், நள்ளிரவில் எதிர்பாராதபடி நான் வீட்டுக்குத் திரும்பினேன். அப்போது என் மனைவி கள்ளப் புருஷனுடன் கணவன்—மனைவி போல் நடந்து கொண்டிருந்தாள். என்னைக் கண்டவுடன் கள்ளப் புருஷன் ஜன்னல் வழியாக பாய்ந்து ஓடினான்."

கண்டி மாவட்ட நீதிபதி திரு. சி. பி. வலகம்பாய முன் விசாரிக்கப்பட்ட விவாகரத்து வழக்கொன்றில் கணவன் ஒருவர் மேற்கண்டவாறு சொன்னார்.

இவ் வழக்கில் கண்டி பொது மராமத்து இலாகாவைச் சேர்ந்த எச். ஜே. சிறிசோம என்பவர் தனது மனைவியான தொரகமுவ திகஹாவத்துறையைச் சேர்ந்த எம். ஏ. ரொசலின் பெரேரா என்பவரிடம் இருந்து விவாகரத்துக் கோரினார்.

இரண்டாவது பிரதிவாதியான மனைவியின் காதலனிடம் இருந்து ரூபா 30,000 நஷ்ட ஈடு கோருவதாக கணவன் தன் மனுவில் குறிப்பிட்டுள்ளார். எனினும் இரண்டாவது பிரதிவாதி பணம் இல்லாதவர் என்றபடியால் அந்த நஷ்ட ஈட்டுத் தொகையை ஒரு ரூபாவாகக் குறைப்பதாக கணவனின் வழக்கறிஞர் ஜனாப் எஸ். எம். முஸ்தபா நீதிமன்றத்தில் அறிவித்தார்.

1960 ஏப்ரல் 11-ம் திகதி மனைவியைத் திருமணம் செய்ததாகவும், அதன் பின் பிறந்த குழந்தை இப்போது மனைவியின் பொறுப்பில் இருப்பதாகவும் மனுதாரக் கணவன் சொன்னார்.

தொடர்ந்து சாட்சியமளித்த கணவன் கூறியதாவது:—

"1968-ம் வருடம் செப்டெம்பர் மாதம் நான் என் மனைவி மீது சந்தேகப்பட்டேன். அதே மாதம் 27-ம் திகதி ஹட்டனுக்குப் போவதாகக் கூறி நான் கொழும்பிலேயே தங்கினேன். நள்ளிரவு எதிர்பாராத வகையில் நான் வீட்டுக்குச் சென்ற போது அறையினுள் எனது மனைவியும் இரண்டாவது பிரதிவாதியும் தகாத செயலில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதைக் கண்டேன்.

"என்னைக் கண்டவுடன் அவர் ஜன்னல் வழியாகப் பாய்ந்தோடினார். அன்று நான் பொலீஸில் முறைப்பாடு பதிந்துவிட்டு எனது மாமி ஒருவரின் வீட்டில் இரவைக் கழித்தேன். மறுநாள் காலை நான் வீட்டுக்குச் சென்ற சமயம் மனைவி வீட்டில் இருக்கவில்லை.

"இப்போது மனைவியும் இரண்டாவது பிரதிவாதியும் பகிரங்கமாகவே கணவன் மனைவி போல வாழ்க்கை நடத்துகின்றனர். அவர்களுக்கு குழந்தை ஒன்றும் இருக்கிறது."

பிரதிவாதிகள் நீதிமன்றத்துக்குச் சமுகமளிக்காததால் விவாகரத்துக்கு அனுமதி வழங்கி தீர்ப்பு அளிக்கப்பட்டது. (ல)

## '21 வயது மனைவியைப் பிரிய 40 வயது கணவனுக்கு இஷ்டமில்லை'

கண்டி, ஜூன் 5

"எனது கட்சிக்காரருக்கு 40 வயதாகிறது. அவரிடம் இருந்து சிவனும்சம் கேட்கும் மனைவிக்கு 21 வயது. இந்த இளவயதுப் பெண்ணை இழக்க விரும்பாததால்தான் அவர் மீண்டும் ஒற்றுமையாக முயற்சிக்கிறார்."

கண்டி மாவட்ட நீதிபதி திரு. சி. பி. வலகம்பாய முன் விசாரிக்கப்பட்ட விவாகரத்து வழக்கொன்றில் பிரதிவாதியின் வழக்கறிஞர் ஒருவர் மேற்கண்டவாறு சொன்னார்.

இவ் வழக்கில் வேல்லகமை கலுகலதென்னை தோட்டத்தைச் சேர்ந்த திருமதி ஹத்தாகெதர அலிஸ் ஸ்டான்லி என்ற பெண் வி. ஏ. ஏ. ஜஸ்டின் ஜேம்ஸ் என்ற ஓவியரிடம் இருந்து விவாகரத்து கோரினார்.

திருமணத்தின் போது மனைவிக்கு 19 வயது என்றும், பிரதிவாதி மனுதாரப் பெண்ணை பதிவுகாரர் காரியாலயத்துக்கு அழைத்துச் சென்று ஏமாற்றித் திருமணம் செய்ததாகவும் அன்றிலிருந்து அவர்கள் கணவன் மனைவியாக வாழவில்லை என்றும் மனுதாரப் பெண்ணின் வழக்கறிஞர் சொன்னார்.

நீதிபதி: பதிவுகாரர் காரியாலயத்தில் கையொப்பம் இடும் போதாவது தான் திருமணம் செய்வதை இப் பெண் அறியவில்லையா?

வழக்கறிஞர்: இல்லை சார்.

நீதிபதி: (மனுதாரப் பெண்ணைப் பார்த்து) நீர் ஏன் கையொப்பம் இட்டீர்?

பெண்: என்னைப் பயமுறுத்தியதால்.

நீதிபதி: கையொப்பம் இட்டபின் நீர் அவருடன் கணவன்—மனைவியாக வாழவில்லையா?

பெண்: இல்லை சார்.

நீதிபதி: நீர் அவருடன் கணவன் மனைவி போல் வாழ விரும்பவில்லையா?

பெண்: இல்லை சார்.

பிரதிவாதியின் வழக்கறிஞர்: சார், திருமணம் செய்து இவர்கள் இருவரும் சந்தோஷமாகவே வாழ்ந்தனர். ஆனால் மனுதாரரின் பெற்றோர்தான் இந்தத் தொல்லைகளுக்கெல்லாம் காரணம்.

நீதிபதி: மனுதார் பிரதிவாதிக்கு எழுதியுள்ள கடிதத்தின்படி, மனுதாரப் பெண் பெருமதி இல்லாத நாணயம் போல் வாழ்ந்திருக்கிறார்.

மனுதாரப் பெண்: ஆமாம் சார், இச் சம்பவத்துக்குப் பின் என் பெற்றோரும் என்னை நிராகரித்தனர்.

நீதிபதி: (பிரதிவாதியைப் பார்த்து) உமது மனைவி உம்முடன் வாழ இஷ்டப்படவில்லை, நீர் ஏன் அவளுடன் வாழ விரும்புகிறீர்?

பிரதிவாதியின் வழக்கறிஞர்: சார், இவருக்கு 40 வயதாகிறது. மனைவிக்கு 21 வயது. அதனால் இவருக்கு அவளை விடப் பிரியமில்லை. (சிரிப்பு)

விவாகரத்துக்கு அனுமதி வழங்கித் தீர்ப்பு அளிக்கப்பட்டது. (ல)

## பாம்புக்கும் புலிக்கும் மட்டுமே அவள் பயம்!

பாட்னா, ஜூன் 5

மாவோ ஆதரவுப் புரட்சியாளர் 53 பேருடன் இந்தியக் காட்டில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட மேரி டேலர் என்னும் லண்டனைச் சேர்ந்த பருவக் குமரி ஒருத்தி, தான் கம்யூனிஸத்துக்காக உயிரையும் விடத் தயார் என அதிகாரிகளிடம் கூறினாள். ஆனால், பாம்பையும், புலியையும் கண்டால் தனக்குப் பெரும் பீதி ஏற்படுவதாக அவள் ஒத்துக் கொண்டாள்.

தென் பீகாரைச் சேர்ந்த காட்டில் வைத்து பாடசாலை ஆசிரியையான செல்வி டேலர் எனப்படும் இந்த 26 வயது குமரியைப் பொலீஸார் கைதுசெய்தனர்.

தான் கம்யூனிஸத்துக்காகப் போராட இந்தியாவுக்கு வந்த நாள்முதல் பாம்புகளையும், புலிகளையும் கண்டால் மட்டுமே பயப்படுவதாகக் கூறியிருக்கிறாள். பீகார் பொலீஸ் மா அதிபர் திரு. ஆர். ஏ. பி. சின்ஹா மேற்கூறிய தகவலைக் கூறினார்.

பிரிட்டன் கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கத்தவரான செல்வி டேலர் இந்திய நக்ஸல்பாரிகளில் ஒருவரான வங்காளத்தைச் சேர்ந்த திரு. ஆமலெண்டு சென் என்பவரைத் திருமணம் செய்து இந்தியாவிலேயே தங்குவதற்காக இங்கு வந்தாளென பொலீஸார் கூறுகின்றனர்.

தற்சமயம் சிறையில் வைக்கப்பட்டுள்ள செல்வி டேலர் பயங்கர ஆயுதங்கள் வைத்திருந்த குற்றத்துக்காக இன்னும் 53 நக்ஸல்பாரிகளுடன் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்படுவாள். (ல)

## இரு குழந்தைகளின் தந்தை குமரியுடன் களவாக ஓட்டம்

மத்துகமை, ஜூன் 5

"எனது தங்கை முறைப்பாட்டுக்காரருடன் களவாக ஓடினாள். நான் இதற்கு எதிர்ப்புக் காட்டினேன். எனது தங்கை மிகவும் வயது குறைந்தவள். தன்னுடன் களவாக ஓடி வரும்படி அவர் என் தங்கையை அழைத்தபோது அவர் இரண்டு குழந்தைகளின் தந்தையாவார். அதனால்தான் நான் இதை விரும்பவில்லை."

இவ்வழக்கில், மத்துகமை நாராவிலையைச் சேர்ந்த ஆர். சைனேரிஸ் என்பவருடைய வீட்டுக்குத் தீ வைத்ததாக ஐயனேரிஸ், டபிள்யூ. டேவிட், டபிள்யூ. சிரிதியல் ஆகியோர் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர்.

மத்துகமை நீதிபதி திரு. நிஸ்ஸங்க வீரரத்ன முன் சாட்சியமளித்த மூன்றாவது எதிரியான டபிள்யூ. சிரிதியல் என்பவரே மேற்கண்டவாறு சொன்னார்.

தொடர்ந்து சாட்சியமளித்த சிரிதியல் கூறியதாவது—

"முறைப்பாட்டுக்காரர் சிசிலியா என்ற பெண்ணை மணந்திருந்தார். அவள் நாகபாம்பொன்று தீண்டி மாண்டாள். அப்போது அவளுக்கு முறைப்பாட்டுக்காரரால் இரண்டு குழந்தைகள் இருந்தன. அச்சமயம் எனது தங்கை என்னுடன் வாழ்ந்து, சம்பவத்திற்கு நான்கு நாட்களுக்கு முன் வீட்டை விட்டு மறைந்திருந்தாள்.

"நான் விசாரித்துப் பார்த்த போது எனது தங்கை முறைப்பாட்டுக்காரருடன் வாழ்வதாக அறிந்தேன். இது பற்றி நான் பொலீஸுக்கும் முறைப்பாடு செய்தேன்."

இரண்டாம் எதிரி டேவிட்டை விடுதலை செய்த நீதிபதி மேல் விசாரணையை ஜூன் 7-ம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ல)

## அரசாங்க கட்சி இன்று கூடுகிறது

ஐக்கிய முன்னணி அரசாங்கக் கட்சியின் முதற் கூட்டம் இன்று மாலை மூன்று மணிக்கு நாடாளு மன்றக் கட்டடத்தில் நடைபெறும்.

சபாநாயகர், உப சபாநாயகர், கமிட்டிகள் தலைவர் ஆகியோரின் தெரிவு பற்றி இன்றைய கூட்டத்தில் பேசப்படும். (ல)

## கிராம சேவகர் வேலை பெறுவர்

அரசியல் காரணங்களுக்காக வேலை நீக்கம், இடமாற்றம் செய்யப்பட்ட கிராம சேவகர்கள் பற்றி உடன் அறிவிக்கும்படி உள்நாட்டு அமைச்சு அரசாங்க அதிபர்களைக் கேட்டுள்ளது.

உள்நாட்டு மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா இது சம்பந்தமான உக்கரவை அனுப்பி உள்ளார். (ல)

## மீண்டும் பணிஸ்

பாடசாலை மாணவரின் மதிய போசன உணவாக மீண்டும் இலவச பணிஸ் வழங்குவது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இதுபற்றி கல்வி மந்திரி ஜனாப் பதியுதீன் மஹ்மூத் தனது அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. டி. ஜி. தயாரத்தினவுக்குக் கூறி உள்ளார்.

தற்போது வழங்கப்படும் பிஸ்கோத்தை பெரும்பாலான பிள்ளைகள் விரும்பவில்லை என பல பாடசாலைகளில் இருந்து புகார் தெரிவிக்கப்பட்டு உள்ளது. (ல)

## நஞ்சு குடிக்கப் போவதாக கூறிவிட்டுச் செத்தாள் குமரி

லத்பந்துர, ஜூன் 5

லத்பந்துர டால்கீத் குரூப் தோட்டத்தைச் சேர்ந்த 16 வயதுப் பருவப் பெண் ஒருத்தி நஞ்சு குடித்துத் தற்கொலை செய்து கொண்டாள்.

பி. எம். குசுமாவதி என்ற இப் பெண்ணின் மரணம் பற்றி திரு. டி. ஜே. கலபொட விசாரணை நடத்தினார்.

எஸ். முருகையா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

"குசுமாவதி வசித்த அதே லயத்திலேயே நானும் வசித்தேன். அன்றைய தினம் குசுமாவதியின் வீட்டுக்கு முன் நான் விறகு கொத்திக் கொண்டிருந்தேன். அப்போது, "முருகையா, இன்றைக்கு நான் நஞ்சு குடிக்கப் போகிறேன்" என அவள் சொன்னாள். நான் ஏன் எனக் கேட்ட போது, தான் சும்மா அப்படிக் கூறியதாக அவள் சொன்னாள்.

சிறிது நேரம் கழித்து குசுமாவதி கிரட்டை ஒன்றை வெளியில் வீசினாள். அதன் பின் குளறிக் கொண்டே கீழே விழுந்தாள். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்படும் முன் இறந்தாள்."

இறந்த பெண்ணின் தங்கையான பி. எம். கருணாவதி, தாயார் ரொஸ்லின் ஆகியோரும் சாட்சியமளித்த பின் தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. (ல)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போகம்பரை கூட்டத்தில் டாக்டர் பதியுதீன்

# நாட்டின் கல்வி முறையில் பெரும் மாற்றங்கள் ஏற்படும்

கண்டி, ஜூன், 5

"தேசிய உயர் கல்வித் திட்டத்தையும் நாட்டின் கல்வி பற்றி ஆராய நியமிக்கப்பட்ட சகல கமிஷன்களையும் இவ்வரசாங்கம் கலைத்து விடும்" என்று கண்டி போகம்பரை மைதானத்தில் நடைபெற்ற மாபெரும் கூட்டம் ஒன்றில் கல்வி மந்திரி அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் சொன்னார்.

மாணவர் சங்கம், பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம், பேராதனை பல்கலைக் கழக சிறு ஊழியர் சங்கம் ஆகியன இவ்வெற்றிக் கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தன.

இக்கூட்டத்துக்கு முன் ஆண், பெண் இருபாலாரும் கலந்து கொண்ட மாபெரும் கூட்டம் ஒன்று பேராதனை பல்கலைக் கழகத்திலிருந்து போகம்பரை மைதானத்தைச் சென்றடைந்தது.

இந்த ஊர்வலத்தின் முன்னால் காலஞ் சென்ற எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் பிரம்மாண்டமான உருவப் படம் ஒன்று கொண்டு செல்லப்பட்டது. அதன் பின் முன்னாள் பிரதமர் டட்லியினுடையவும், தேசிய உயர்க் கல்விச் சபைத் தலைவர் டாக்டர் மலலசேகராவுடையவும் கொடும்பாவிகளை மாணவர்கள் தூக்கிச் சென்றனர். இவைகளுக்குப் பின்னால் சவ ஊர்வல இசையுடன் பிரேதப் பெட்டியொன்றில் முன்னாள் கல்வி மந்திரி திரு. ஈரிய கொல்லேயின் கொடும்பாவி ஒன்று கொண்டு செல்லப்பட்டது.

ஊர்வலம் போகம்பரை மைதானத்தைச் சென்றடைந்ததும் கூட்டத்தினரின் ஊச்சத்தங்களுக்கிடையில் திருவாளர்கள் டட்லியுடையவும் மலலசேகராவுடையவும் கொடும்பாவிகள் எரிக்கப்பட்டன. பல்கலைக் கழக மாணவர் சங்கத்தலைவர் திரு. ரன்ஜித் சமரநாயக்கா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கல்வி மந்திரி டாக்டர் பதியுதீன் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்திருக்கும் இவ்வேளையில் பொது மக்கள் எதிர்பார்த்தவாறே கிராமப்புறக் குழந்தைகள் உயர் கல்வியைப் பெற்றுக் கொள்ளவும், விஞ்ஞானக் கல்வியை தாய் மொழி மூலம் கற்றுக் கொள்ளவும் அவசியமான எல்லாவித நடவடிக்கைகளையும் புதிய அரசாங்கம் மேற்கொள்ளும்.

"தேசிய உயர் கல்வித் திட்டத்தை முற்றாக நீக்கி விடுவதுடன் இந்தக் கல்வி சம்பந்தமாக ஆராய நியமிக்கப்பட்ட ரோயல் கமிஷனையும் கலைத்து விட உள்ளோம்.

"நாட்டின் எதிர்கால முன்னேறத்திற்கு உழைக்கக் கூடிய வகையில் மாணவர்களுக்கு தகுந்த கல்வி முறை ஒன்றையும் நாம் ஏற்படுத்துவோம்.

"புதிய கல்வி அமைச்சராகப் பதவி ஏற்ற பின் எனக்கு முதன் முறையாக பல்கலைக் கழக மாணவர்கள் மத்தியில் பேசக் கிடைத்ததையிட்டு பெரு மகிழ்ச்சி அடைகிறேன். இதன் பொருட்டு என்னை பெருமனது கொண்டு வரவேற்றது குறித்தும் மகிழ்ச்சி அடைகிறேன்.

"கடந்த ஐந்து வருட காலத்தில் தேசிய அரசாங்கத்தின் எந்த ஒரு அமைச்சரும் பேராதனைப் பல்கலைக் கழகத்திற்கு விஜயஞ் செய்து மாணவர் மத்தியில் பேசியதில்லை.

"குடிசைகளில் வாழ்கின்ற ஏழைக் குழந்தைகளுக்குக் கூட அமைச்சர்களாகவும், நாடாளு மன்ற உறுப்பினர்களாகவும் வருவதற்கு வழி வகுத்தவர் காலஞ் சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவே. எனவேதான் 1956-ம் ஆண்டில் சிங்கள மொழி முக்கிய இடம் பெற்றது.

"பொது மக்களின் அயராத முயற்சியால் ஐக்கிய முன்னணி தேர்தலில் வெற்றி வாகை சூடியது. தேர்தல் விஞ்ஞாபனத்தில் நாம் கூறியவற்றை அப்படியே நிறைவேற்றவும் உள்ளோம்.

"நீங்கள் எல்லோரும் நாட்டின் மீது தேசாபிமானம் உள்ளவர்களாகவும் கல்வி அபிவிருத்தியின் பொருட்டு மேற்கொள்ளும் எல்லா நடவடிக்கைகளுக்கும், நல்லாதரவு தருபவர்களாகவும் இருக்குமாறு உங்களை வேண்டிக் கொள்கிறேன்" என்றார்.

பேராசிரியர்களான திரு. எச். ஏ. டி. எஸ். குணசேகரா, திரு. எதிரிவீர, சரச்சந்திரா, கலாநிதி இந்திரபாலா, கலாநிதி வெஸ்லி குணவர்தன, குண்டசாலை எம். பி. திரு. யூ. பி. வை. ஜினதாஸ ஆகியோர் உட்பட பலர் உரையாற்றினர். (ல)

### பிரசித்த ஏல விற்பனை

அட்டன் மெயின் வீதி 66-ம் நிர். கடையில் எஸ். தே. வை. நடராஜ பிள்ளை அன் கோ என்ற விலாசத்தில் நகை அடைவு பிடிக்கும் ரா. நடராஜபிள்ளை அவர்களிடம் 1-7-62 முதல் 31-3-69 வரை அடைவு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் 1970, ஜூன் மாதம் 25-ம் திகதி வியாழக்கிழமை காலை 11 மணி தொடக்கம் குறித்த கடையில் இருந்து பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

**A.M.சோமசுந்தரம்**
வெந்திஸ் மேஸ்தர்.
அட்டன்.
2-6-70.

### பிரசித்த ஏல விற்பனை

நாவலப்பிட்டி கும்பளை ரோட் 25-ம் நிர். கடையில் ஏ. கே. எம். தேவருயபிள்ளை அன் கோ, என்ற விலாசத்தில் நகை அடைவு பிடிக்கும் கரு. பெரியண்ணபிள்ளை அவர்களிடம் 10-6-63 முதல் 24-3-68 வரை அடைவு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் 1970, ஜூன் மாதம் 30-ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் குறித்த கடையில் இருந்து பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

**A.M.சோமசுந்தரம்**
வெந்திஸ் மேஸ்தர்.
அட்டன்.
2-6-70.

## பிரதமருக்கு, டட்லி.

(1ம் பக்கத் தொடர்ச்சி).

"இன்று மக்களுக்கும் அவர்களின் உடைமைகளுக்கும் ஆபத்தான முறையில் வன்முறைச் செயல்கள் பிரயோகிக்கப்படுகின்றன என்பதுதான் உண்மை. எந்தக் கட்சிதான் குற்றவாளியாக இருந்தபோதிலும் சட்டத்தையும் ஒழுங்கையும் காப்பாற்றும் பொறுப்பில் உள்ளவர்கள், பாரபட்சமற்ற முறையில் நாட்டில் அமைதியை நிலைநாட்ட வேண்டியது அவசியம். ஆனால் அவ்வாறு நடைபெறவில்லை என்பதை மனவருத்தத்துடன் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

"உங்களிடம் சில உண்மைகளைச் சமர்ப்பித்து, இன்றைய நிலைமைகள் பற்றி ஆராயவும் விசாரணை செய்யவும் பாரபட்சமற்ற ஆணைக் குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்று கோரவே பேட்டி அளிக்குமாறு உங்களை வேண்டினேன். ஆனால், உங்கள் பதிலின் தொனியையும் அதன் அடக்கத்தையும் அவதானிக்கும் பொழுது இந்தப் பேட்டியால் எந்த விதமான பிரயோசனமும் ஏற்படாது என்றே உணர வேண்டி இருக்கிறது.

"உங்கள் கடிதத்தில், திரு. ஜே. ஆர். ஜயவர்தன சம்பந்தமாக "டெய்லி நியூஸ்" பத்திரிகையில் மே 29-ம் திகதி பிரசுரமாகி இருந்ததாகக் குறிப்பிட்டிருந்தீர்கள். ஆனால் அது மே 26-ம் திகதி பத்திரிகையிலேயே வெளிவந்துள்ளது. அந்தக் கட்டுரையை நீங்கள் படித்தால், அதில் அவர் சுதந்திரம், ஜனநாயகம், பொதுத் தேர்தல் எல்லாம் அற்று, சர்வாதிகாரம் நிலைநாட்டப்பட்டால் மக்களுக்கு ஒரே மார்க்கம்தான் உள்ளது என்று வலியுறுத்தியுள்ளதைக் காண்பீர்கள்.

இவ்வாறு திரு. சேனநாயக்கா தன் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (ல)

### வானொலியில் நிதி மந்திரி பேச்சு

## 'கடந்த ஆட்சி காலத்தில் நிதி நிலைமை படுமோசம்'

"நாடு சுபீட்சம் அடைந்து வருவதாக கடந்த அரசாங்கம் மக்களுக்குக் கூறியது. ஆனால், உண்மையை ஆராய்ந்து பார்க்கும் போது நிலைமை வேறு விதமாக இருக்கிறது".

நாட்டு மக்களுக்கு வானொலி மூலம் பேசிய நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா மேற்கண்டவாறு கூறினார்.

டாக்டர் என். எம். பெரேரா தனது வானொலிப் பேச்சில் மேலும் தெரிவித்ததாவது:—

"நாட்டின் உண்மையான நிதி நிலைமையை நாட்டு மக்கள் அறிந்திருப்பது அவசியமானதாகும். நாட்டின் நிதி நிலைமை பற்றி அரசியல் காரணங்களுக்காகத் தப்புக் கணக்குப் போட்டுக் காண்பிக்கப்பட்டுள்ளது.

"கடந்த ஆட்சி காலத்தில் நாட்டின் மோசமான நிதி நிலைமை பற்றி திறைசேரியும் மத்திய வங்கியும் எச்சரித்துள்ள போதிலும் வேண்டுமென்று பல உண்மைகள் மறைக்கப்பட்டு உள்ளன.

"அரசாங்கங்கள் பிழை விடுவது இயல்புதான். ஆனால் மக்களைத் தவறான பாதையில் இட்டுச் செல்பவர்களை மன்னிக்க முடியாது.

"இன்றைய நிலைமையில் மக்களின் ஒத்துழைப்பு எமக்கு அவசியம் தேவை. மக்கள் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

"வெளிநாடுகளுக்கு யாத்திரை செல்பவர்கள் அல்லது விடுமுறையைக் கழிப்பதற்காக வெளிநாடு செல்பவர்கள் தமது பயணத்தை மற்றொரு தருணத்துக்கு பின் போடுவது மூலம் அரசாங்கத்துக்கு உதவி செய்ய முடியும்".

இவ்வாறு டாக்டர் என். எம். பெரேரா தமது உரையில் தெரிவித்தார். (ல)

## காதலியின் தலையை வெட்டி தன்னுடன் வைத்திருந்தான்

லயன்ஸ் (பிரான்ஸ்), ஜூன் 5

தன் காதலியின் தலையைத் துண்டித்து அதை மூன்று தினங்கள் வைத்திருந்த இரட்டைக் கொலைஞன் ஒருவனுக்குப் பிரெஞ்சு நீதிமன்றம் 15 ஆண்டு சிறைத் தண்டனை விதித்தது.

39 வயதான பியரி கொச்வார்ட் என்பவன் ஒரு தகராறை அடுத்து தனது காதலியையும், மற்றோர் ஆண் நண்பரையும் கத்தியால் குத்திக் கொன்றான்.

வழக்கு விசாரணையின்போது தமக்கு மரண தண்டனை விதிக்குமாறு பல முறை அவன் கேட்டுக் கொண்டான்.

கொலை செய்த பின்பு தன் காதலியின் தலையைக் கத்தி ஒன்றால் வெட்டியதாக அவன் ஒப்புக் கொண்டான்.

"இனிமேல் என் காதலியைப் பார்க்க முடியாது என்பதால்தான் அவளது தலையை வைத்திருந்தேன்" என்றான் அவன்.

கைது செய்யப்படும் வரை அப் பெண்ணின் தலையை அவன் வைத்திருந்தான். (ய)

## காணியற்ற சிறுபான்மை தமிழருக்கு நியமன எம். பி. உதவி

நியமன உறுப்பினர் திரு. எம். ஸி. சுப்பிரமணியம், சிம்மாசனப் பிரசங்க விவாதம் முடிவுற்ற பின் கீழ்க்கண்ட விடயங்களை நாடாளு மன்றத்தில் சமர்ப்பிக்கப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

★ காணியில்லாத சிறுபான்மைத் தமிழருக்கு அரசாங்கக் காணி வழங்கப்பட வேண்டும்.

★ சிறுபான்மைத் தமிழரிடையே படித்துப் பட்டம் பெற்றுள்ளவர்களுக்கு ஆசிரிய பதவிகள், பதவி உயர்வு, சர்வகலாசாலை, ஆசிரிய பயிற்சிக் கல்லூரித் தேர்வு ஆகியவற்றில் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

★ கள்ளிறக்குவோரின் பொருளாதார நிலையை உயர்த்தி, வடக்கில் பனைக் கூட்டுத்தாபனம் ஒன்றை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★ சிறுபான்மைத் தமிழர் உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவு செய்யப்படும் வகையில் வட்டாரங்களைப் பிரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ல-15)

### தொழிற் சங்க உதவிகள்

நாட்டின் நிதி நெருக்கடியைத் தீர்க்க உதவுமாறு நிதி மந்திரி டாக்டர் என். எம். பெரேரா விடுத்த வேண்டுகோளை அடுத்து பல தொழிற்சங்கங்கள் நேற்றுக் கூடி இது பற்றி ஆலோசித்தன.

தபால் சேவைத் தொழிற் சங்கங்களின் அங்கத்தினர்கள் தங்கள் இரண்டு நாள் சம்பளத்தை அளிக்க முன்வந்துள்ளனர்.

துறைமுகத் தொழிற் சங்கங்களின் அங்கத்தினர்கள் ஒரு நாள் சம்பளத்தை அளிப்பது குறித்து ஆலோசிக்க இருக்கின்றனர். (ய)

### கொண்டாடுவர்

இம்மாதம் 14-ம் திகதி முதல் ஆஸ்பத்திரிகளில் இரண்டு வேளைச் சோறு வழங்கப்படும் என அரசு அறிவித்ததைத் தொடர்ந்து, அன்றைய தினம் கோலாகலமாக விழா எடுப்பதற்கு ஆஸ்பத்திரி ஊழியர்கள் முடிவு செய்துள்ளனர். (ல)

இப் பத்திரிகையை அச்சிட்டவர் சுயா... பத்திரிகா சமாஜம், 5. குணசேனமாவத்தை, கொழும்பு ... (இலங்கை). வெளியீட்ட திகதி 6 ஜூன் 1970.
Thanthi 5, Gunasena Ma... 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org